மாமன்றத்திலே தெரிவிக்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

காலிப் பணியிடங்கள்

4238*—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் இயங்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

மிகவும் அற்புதமான பொற்கால ஆட்சிக்குச் சொந்தமான, எங்கள் பொற்கால முதல்வர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 289 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், மொத்தம் 235 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, இவற்றில் 47 பணியிடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 188 காலிப் பணியிடங்களை நிரப்பத் தேவையான ஆசிரியர்கள் தெரிவுப் பட்டியலை அனுப்பி வைக்குமாறு

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2013 மார்ச் 25]

13–3–2013 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து தெரிவுப் பட்டியல் வரப்பெற்றவுடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலுடன் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் விரைவாக நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், பள்ளிக் கல்வித் துறையிலே, ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குள், 51,757 ஆசிரியர் பணியிடங்களையும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியிடங்களையும் நிரப்பி, தமிழகத்திலேயே, இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பணியை கல்வித் துறைக்கு செய்திருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வருகின்ற அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருக்கின்ற பள்ளிகளில் காலியாகவுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருந்துவருகின்றன. ஏற்கெனவே இந்தப் பள்ளிகளில் பணிபுரிந்த பட்டதாரி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 141 பேர், வெளி மாவட்டங்களிலிருந்து இங்கு பணிபுரிவதால், அவர்களை வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணிபுரிவதற்கு தமிழக அரசு ஆணையிட்டிருக்கிறது. அவர்களுக்கும் சேர்த்து கள்ளர் சீரமைப்புத் துறையில் இப்போது புதியதாக ஆசிரியர் பணியிடங்கள் நியமனம் செய்ய வேண்டி இருக்கிறது. அதுமட்டுமல்ல, காவலர் மற்றும் சமையலாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இந்தப் பணியிடங்களெல்லாம் உடனடியாக நிரப்பப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். இதுவரை சரித்திரத்திலே இல்லாத அளவிற்கு, ஆசிரியர் பணிக்குத் தேவையான அனைத்து காலிப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, தமிழ்நாடு முழுவதும் எங்கெல்லாம் காப்பாளினி மற்றும் சமையலாளி பணியிடங்கள் காலியாக இருக்கின்றனவோ, அங்கெல்லாம் வேலைவாய்ப்புத் துறைமூலம் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் வேலைகள் நடந்து வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் அதற்கு வேண்டிய பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு அந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதும், அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டே வருகின்றன. அதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.